## சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை

## புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் ( NEEDS)

இத்திட்டம் படித்த இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளித்து நிதி நிறுவனங்கள் மூலமாக கடன் வழங்கி புதிய உற்பத்தி / சேவை தொழில்களை தொடங்க உருவாக்கப்பட்ட திட்டம். இத்திட்டத்தின் கீழ் முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் தகுதியுடையவர்கள்.

1) **திட்ட மதிப்பீட்டுத் தொகை** : ரூ. 5.00 லட்சம் முதல் 1.00 கோடி வரை

2) **மானியத் தொகை** : அரசு மூலம் மானிய உதவி , திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் அதிக பட்சமாக ரூ 25.00 லட்சம் மற்றும் 3 சதவீதம் வட்டி மானியம் வழங்கப்படும்.

3) **வயது வரம்பு** : குறைந்த பட்ச வயது 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.
அதிக பட்ச வயது பொதுப் பிரிவினருக்கு : 35
அதிக பட்ச வயது இதர சிறப்பு பிரிவினருக்கு : 45
(ஆதி திராவிடர் / பழங்குடியினர்/பிற்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சிறுபான்மையினர்/மாற்றுத் திறனாளிகள்/ முன்னாள் இராணுவத்தினர்/திருநங்கைகள்)

4) **கல்வித் தகுதி** : பட்டம் மற்றும் பட்டயம், ஐடிஐ/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் தொழில்சார் பயிற்சி படித்தவர்கள்

5) **பயனாளிகளின் பங்குத் தொகை** : பொது பிரிவினருக்கு திட்ட மதிப்பீட்டில் 10 சதவீதமும்
இதர சிறப்பு பிரிவினருக்கு திட்ட மதிப்பீட்டில் 5 சதவீதமும்

6) **ஒதுக்கீட்டு முறை** : ஆதி திராவிடர் – 18%
பழங்குடியினர் – 1%
மாற்றுத் திறனாளிகள் – 3%
இத்திட்டத்தின் கீழ் மகளிருக்கு (மேற்கண்ட தகுதிகளுடன் உள்ள ஆதரவற்ற / கைவிடப்பட்ட மகளிருக்கு முன்னுரிமை கொடுத்து) 50% இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
மேற்கண்ட ஒதுக்கீடுகளில் தேவையான நபர்கள் இல்லாத பட்சத்தில், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் இதர பிரிவினரிலிருந்து தகுதிகளுடன் கூடிய நபர்களை தேர்வு செய்யலாம்.

7) **வருமான வரம்பு** : இத்திட்டத்தின் கீழ் வருமான வரம்பு எதுவும் கிடையாது.

8) **பங்குதாரர் நிறுவனம்** : உரிமையாளர் / பங்குதாரர்கள் இத்திட்டத்தின்கீழ் உதவி பெற தகுதியுடையவர்கள்.

**9) பிற நிபந்தனைகள்** : புதியதாக துவங்கப்படும் தொழில்களுக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.

மத்திய மற்றும் மாநிலஅரசுகள் மூலம் வழங்கப்படும் பாரதப்பிரதமரின் சுயவேலை வாய்ப்பு திட்டம் (PMRY), பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்புஉருவாக்கும் திட்டம் (PMEGP), படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), கிராமப்புற வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் மற்றும் சுய உதவி குழுக்கள்போன்ற திட்டங்களின் கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற்றிருப்பின், இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெற இயலாது.

வங்கி / தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகிய நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று திருப்பி செலுத்தாதவராக இருத்தல் கூடாது.

**முதன்மை செயலர் / தொழில் ஆணையர் மற்றும்**
**தொழில் வணிக இயக்குநர்**